# தொல்காப்பியம்

1. தம் இயல் கிளப்பின் எல்லா எழுத்தும்
   மெய்ந் நிலை மயக்கம் மானம் இல்லை.

2. ய ர ழ என்னும் மூன்றும் முன் ஒற்ற
   க ச த ப ங ஞ ந ம ஈர் ஒற்று ஆகும்.

3. அவற்றுள்,
   ரகார ழகாரம் குற்றொற்று ஆகா.

4. குறுமையும் நெடுமையும் அளவின் கோடலின்
   தொடர்மொழி எல்லாம் நெட்டெழுத்து இயல.

5. செய்யுள் இறுதிப் போலும் மொழிவயின்
   னகார மகாரம் ஈர் ஒற்று ஆகும்.

6. னகாரை முன்னர் மகாரம் குறுகும்.

7. மொழிப்படுத்து இசைப்பினும் தெரிந்து வேறு இசைப்பினும்
   எழுத்து இயல் திரியா என்மனார் புலவர்.

8. அகர இகரம் ஐகாரம் ஆகும்.

9. அகர உகரம் ஔகாரம் ஆகும்.

10. அகரத்து இம்பர் யகரப் புள்ளியும்
    ஐ என் நெடுஞ் சினை மெய் பெறத் தோன்றும்.

11. ஓர் அளபு ஆகும் இடனுமார் உண்டே
    தேரும் காலை மொழிவயினான.

12. இகர யகரம் இறுதி விரவும்.

13. பன்னீர் உயிரும் மொழி முதல் ஆகும்.